RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-3 | 03 ஜனவரி | வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## “எனக்கும் அன்புமணிக்கும் இடையேயான கருத்து மோதல் சரியாகிவிட்டது” ராமதாஸ் விளக்கம்

விழுப்புரம், ஜன.3



பொதுக்குழுக் கூட்டத்தில் பாமக தலைவர் அன்புமணியும், நானும் பேசியது உட்கட்சி விவகாரம். அது சரியாகிவிட்டது. பாமக இளைஞர் சங்கத் தலைவராக முகுந்தன் பரசுராமனை அறிவித்து விட்டோம். அவருக்கு நியமனக் கடிதமும் கொடுத்துவிட்டோம், என்று பாமக நிறுவனர் ராமதாஸ் கூறியுள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் தைலாபுரத்தில் பாமக நிறுவனர் ராமதாஸ் இன்று (ஜன.2) செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: பொதுக்குழுக் கூட்டத்தில் பேசப்படும் விஷயங்கள், உட்கட்சி விவகாரம். பொதுக்குழுக் கூட்டத்தில் ஊடகவியலாளர்களை எந்தக் கட்சியினரும் அனுமதிக்கமாட்டார்கள். அந்த கூட்டத்தில் பாமக தலைவர் அன்புமணியும், நானும் பேசியது உட்கட்சி விவகாரம். அது சரியாகிவிட்டது. அதன்பிறகு அன்புமணி இங்கு வந்தார். அவருடன் பேசினேன், சரியாகி விட்டது.

பொதுக்குழுக் கூட்டத்தில், பாமக இளைஞர் சங்கத் தலைவராக முகுந்தன் பரசுராமனை அறிவித்துவிட்டோம். அவருக்கு நியமனக் கடிதமும் கொடுத்துவிட்டோம். அவர் அந்தப் பதவியில் நீடிக்கிறாரா என்ற பேச்சுக்கே இடமில்லை. பொதுக்குழுவில் அறிவித்தபடி, அடுத்தநாளே அவருக்கு நியமனம் கடிதம் கொடுத்து விட்டேன்.

பொதுக்குழுவில் நடந்த விவகாரம் பாமகவின் வளர்ச்சியை பாதிக்காது. பாமக, ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் கட்சி சார்பில் நடக்கும், பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டங்களின்போது, என்னை விமர்சியுங்கள், என்னுடைய தவறுகளை விமர்சியுங்கள் என்றுதான் கூறுவேன். நேரடியாக என்னை விமர்சிக்க தயங்குபவர்கள், தொலைபேசி வழியாக என்னிடம் பேசுங்கள் அல்லது கடிதம் எழுதுமாறு கேட்டுக் கொள்வேன். இப்போதும் அதைத்தான் கூட்டங்களில் சொல்கிறேன்.

காரணம் நான் தவறு செய்வதை சுட்டிக்காட்டினால் தான் நான் திருத்திக் கொள்வேன். நான் சொல்வதெல்லாம் சரிதான் என்று கேட்டுச் சென்றால், என் தவறும் தெரியாது நான் திருத்திக்கொள்ளவும் முடியாது.

பத்திரிகையாளர் சந்திப்புகளில் கூட எந்த கேள்வி கேட்டாலும் எனக்கு கோபம் வருவதில்லை. எதற்காக கோபம் வரவேண்டும். ஒரு கட்சியின் தலைவர் உள்ளிட்ட எந்த பதவியில் இருப்பவர்களுக்கும் பத்திரிகையாளர்கள் எந்த கேள்வி கேட்டாலும் கோபம் வரக்கூடாது. மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி குறித்து நான் விமர்சிப்பதை, தைலாபுரத்தில் எனக்கு தைலம் வருகிறது என்று நளினமாக, நாகரிகமாக கூறுவார்.” என்று ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

## திருப்பதி ஏழுமலையான் கோயிலில் 2024ல் ரூ.1,365 கோடி உண்டியல் வருவாய்

திருமலை, ஜன.3



உலக பணக்கார கடவுளாக பக்தர்களால் போற்றி வழிபடப்படும் திருப்பதி ஏழுமலையானுக்கு, கடந்த 2024ம் ஆண்டில் 1,365 கோடி ரூபாயை உண்டியல் மூலம் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தி உள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

திருப்பதி ஏழுமலையானை சுமார் 60 முதல் 70 ஆயிரம் பக்தர்கள் நாள்தோறும் தரிசித்து வருகின்றனர். வார கடைசியான சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் கூடுதலாக மேலும் 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் பக்தர்கள் சாமி தரிசனம் செய்வது வழக்கம். இதுவே பிரம்மோற்சவம், ஆனிவார ஆஸ்தானம், வைகுண்ட ஏகாதசி போன்ற விசேஷ நாட்களில் சுமார் 90 ஆயிரம் முதல் 1 லட்சம் வரை பக்தர்கள் ஏழுமலையானை நீண்ட வரிசைகளில் காத்திருந்து தரிசிப்பர்.

ஒவ்வொரு ஆண்டும் திருப்பதி ஏழுமலையான் கோயிலில் பக்தர்களின் கூட்டம் அதிகரித்து கொண்டே இருக்கிறது. இதன் மூலம் பக்தர்களின் உண்டியல் காணிக்கையும் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது.

இந்தநிலையில் கடந்த ஆண்டில் (2024) மட்டும் ஏழுமலையானை 2.55 கோடி பக்தர்கள் தரிசனம் செய்துள்ளனர். அவர்கள் ரூ.1,365 கோடி உண்டியல் மூலம் காணிக்கை செலுத்தி உள்ளனர். 99 லட்சம் பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தி உள்ளனர். 6.30 கோடி பக்தர்களுக்கு இலவசமாக அன்னதானம் செய்யப்பட்டுள்ளது. 12.14 கோடி லட்டு பிரசாதங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடதக்கது.

## பால் உற்பத்தியாளர்களுக்கான ஊக்கத்தொகை வங்கி கணக்கில் செலுத்தப்படும்: அமைச்சர் அறிவிப்பு

சென்னை, ஜன.3



பால் லிட்டருக்கு ரூ.3 ஊக்கத் தொகை உற்பத்தியாளர்களின் வங்கி கணக்குக்கு நேரடியாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பால் வளத்துறை மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் வெளியிட்ட அறிக்கை: தமிழகம் முழுவதும் கடந்த 201920ம் ஆண்டில் சுமார் 23 லட்சம் லிட்டராக ஆவின் பால் விற்பனை இருந்தது. தமிழக அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கையின் காரணமாக, 202425ல் சுமார் 7 லட்சம் லிட்டருக்கு மேல் அதிகரித்து தற்போது தினசரி 30 லட்சம் லிட்டர் பால் விற்கப்படுகிறது.

கடந்த 2023ம் ஆண்டு டிச.18ம் தேதி முதல் ஆவின் கூட்டுறவு சங்கத்துக்கு பால் வழங்கும் பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ.3 உற்பத்தி ஊக்கத்தொகையாக பிரதம சங்கங்களின் மூலம் நிலுவையின்றி உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது.

இந்நிலையில், பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நலச் சங்கத்தின் கோரிக்கையின்படி, மாவட்ட ஒன்றியத்தில் இருந்து பால் உற்பத்தியாளர்களின் வங்கி கணக்குக்கு நேரடியாக அரசு அறிவித்த ரூ.3 ஊக்கத்தொகை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. முதல்கட்டமாக, நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் மூலமாக, இந்த வாரத்தில் செயல்படுத்தப்பட உள்ளது. இதைத்தொடர்ந்து, பிற மாவட்டங்களிலும் மேற்கண்ட நடைமுறை அமல்படுத்தப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் முகமது அலி கூறும்போது, “வங்கி கணக்குக்கு நேரடியாக செலுத்தும் முறையை வரவேற்கிறோம். இதன்மூலம், தவறுகள் குறையும்” என்றார்.



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலம் பீர்க்கங்காரணை 61 வது வார்டில் திடக்கழிவு மேலாண்மை இருந்த இடத்தில் உள்விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா எம்,எல்,ஏ அவர்கள் ஆய்வு மேற்கொண்டார் உடன் 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ், மாமன்ற உறுப்பினர் ஹேமாவதி சேகர் பகுதி நிர்வாகிகள் வட்ட நிர்வாகிகள் உடன் இருந்தார்...

## கலைஞர் மகளிர் திறன் மேம்பாட்டு மையம் திறப்பு பெண்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி

சென்னை, ஜன.3




பெண்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் சென்னை சைதாப்பேட்டையில் கலைஞர் மகளிர் திறன் மேம்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதனை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று காலை திறந்து வைத்தார். இந்த மையம் பெண்களின் திறன்களை மேம்படுத்த பெரிதும் உதவுகிறது. இதற்காக முறையாக பதிவு செய்து கொண்டு பயிற்சிகளை பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலைஞர் மகளிர் திறன் மேம்பாட்டு மையத்தை திறந்து வைத்த பின்னர், இதில் சேருவதற்கு பதிவு செய்து கொண்ட மாணவிகளுக்கு சேர்க்கை ஆணையை வழங்கினார். குறிப்பாக நேச்சுரல்ஸ் நிறுவனம் மூலம் கலைஞர் மகளிர் திறன் மேம்பாட்டு மைய மாணவிகளுக்கு அழகு கலை பயிற்சி வழங்கப்படவுள்ளது. இந்தியாவின் மிகவும் பிரபலமான உஷா நிறுவனத்தின் மூலம் தையல் பயிற்சியும் அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### திறன் மேம்பாட்டு பயிற்சிகள்

இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் 2,000 மாணவிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து கலைஞர் கணினி மையத்தில் பயிற்சி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கி குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். இந்த விழாவில் பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், நம்முடைய அரசு அண்ணா வழியில், கலைஞர் வழியில் செயல்பட்டு கொண்டிருக்கிறது.

அந்த வகையில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். குறிப்பாக சொல்ல வேண்டுமெனில் அரசு பணிகளில் மகளிருக்கு இட ஒதுக்கீடு, மகளிர் சுய உதவிக்குழுக்கள், சொத்தில் பெண்களுக்கு உரிமை உள்ளிட்டவற்றை சொல்லலாம். பெண்கள் கல்வி கற்க வேண்டும் என்பதை தாண்டி, அனைத்து பெண்களும் உயர் கல்வி கற்க வேண்டும் என்பதை தற்போது உறுதி செய்து வருகிறோம்.

### மகளிர் பொருளாதார தன்னிறைவு

கலைஞர் மகளிர் உரிமை தொகை, விடியல் பயணம், புதுமைப் பெண், பணிபுரியும் பெண்களுக்கான தோழி விடுதி உள்ளிட்டவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மகளிர் பொருளாதார தன்னிறைவிற்காக திராவிட மாடல் ஆட்சியில் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் பெண்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் வகையில் கலைஞர் மகளிர் திறன் மேம்பாட்டு மையம் திறக்கப்பட்டுள்ளது என்று மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

## அண்ணா பல்கலை., பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் நேர்மையான விசாரணை தேவை: திருமாவளவன்

சென்னை, ஜன.3



அண்ணா பல்கலை., பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் நேர்மையான விசாரணை தேவை என விசிக தலைவர் திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் இன்று (வியாழக்கிழமை) செய்தியாளர்களை சந்தித்த திருமாவளவன் கூறியதாவது: அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட விவகாரத்தில் நேர்மையான விசாரணை தேவை. இப்பிரச்சினையில் எதிர்க்கட்சிகள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளன. எதிர்க்கட்சிகளின் அமைதியான போராட்டங்ளுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்பதே விசிகவின் நிலைப்பாடு. அதேவேளையில் எதிர்க்கட்சிகளும் இந்த சம்பவத்தை அரசியலாக்குவதற்காகப் போராட்டங்கள் நடத்தக் கூடாது.

மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் ஞானசேகரன் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். வழக்கில் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தாலும் கூட அந்த குற்றச்செயல் பெரும் வருத்தத்தையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர் தவிர்த்து வேறு சிலரும் ஈடுபட்டிருக்கலாம் என்ற வலுவான சந்தேகம் உள்ளது. அதனால், அரசும், காவல்துறையும் நேர்மையான முறையில் விசாரணை செய்து குற்றவாளி யாராக இருந்தாலும் கைது செய்ய வேண்டும்.

ஞானசேகரன் சிறையில் இருக்கும்போதே விசாரணையை முடித்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து தண்டனை கொடுக்க வேண்டும். அவரையும் தாண்டி வேறு யாரும் அந்தக் குற்றச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருந்தால் அவர்களும் கைது செய்யப்பட வேண்டும். விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவிகளுக்கு பாதுகாப்பு வழங்க கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

சம்பவமும், கைதும்: சென்னை அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில், மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. சம்பவத்தில் கோட்டூர், மண்டபம் சாலை பகுதியைச் சேர்ந்த பிரியாணி கடை நடத்தி வரும் ஞானசேகரன் (37) கைது செய்யப்பட்டுள்ளார். ஜாமீனில் வெளியே வர முடியாதபடி அவர் மீது 8 பிரிவுகளின் கீழ் போலீஸார் வழக்கு பதிந்துள்ளனர். ஞானசேகரன் மீது கோட்டூர்புரம் காவல் நிலையத்தில் 20 வழக்குகள் நிலுவையில் உள்ளன. இவற்றுள் பெரும்பான்மையான வழக்குகள் திருட்டு சம்பந்தப்பட்ட வழக்குகள்.

‘யார் அந்த சார்’ போராட்டம்: இந்த வழக்கில் மாணவி கொடுத்த புகாரின் முதல் தகவல் அறிக்கை வெளியானது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அந்த எஃப்ஐஆரில் கைதான நபர் போனில் சார் என்று ஒருவருடன் பேசியதாக குறிப்பிடப்பட்டதை சுட்டிக் காட்டி எதிர்க்கட்சிகள் குறிப்பாக அதிமுக யார் அந்த சார்? என்று போஸ்டர் தொடங்கி போராட்டம் வரை கேள்வி எழுப்பி வருகிறது.

அண்மையில் இது தொடர்பாக விளக்கமளித்த அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, “சென்னை அண்ணா பல்கலைக்கழக பாலியல் வன்கொடுமை வழக்கில், உண்மைக் குற்றவாளி தப்பிவிடாமல், மாணவிக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகவே ‘யார் அந்த சார்’ போராட்டத்தை அதிமுக முன்னெடுத்து வருகிறது.” என்று விளக்கம் அளித்திருந்தார்.

இந்நிலையில் இன்று பேட்டியளித்துள்ளா விசிக பொதுச் செயலாளர் திருமாவளவனும், அண்ணா பல்கலைக்கழக சம்பவத்தில் ஞானசேகரனைத் தவிர வேறு யாரும் சம்பந்தப்பட்டிருந்தால் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

## கல்வி வளாகங்களில் வெளிநபர் நுழைய கட்டுப்பாடு தேசிய மகளிர் ஆணையம் அறிவுறுத்தல்

சென்னை, ஜன.3




கல்வி வளாகங்களில் வெளி நபர்கள் நுழைய கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டும் என்று தேசிய மகளிர் ஆணையத்தின் உறுப்பினர் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை குறித்து விசாரணை நடத்திய தேசிய மகளிர் ஆணையத்தின் உறுப்பினர் பிரவீன் தீட்சித் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மாணவி பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் கைது செய்யப்பட்டுள்ள நபரின் கடந்த கால செயல்பாடுகள் என்னென்ன, அவருடன் தொடர்பில் இருந்தவர்கள் யார் என்பது குறித்து முழுமையாக விசாரிக்க வேண்டும்.

அப்போதுதான் இந்த சம்பவத்தில் வேறு யாருக்கு தொடர்பு இருக்கும் என்பது தெரிய வரும். அந்த நபர் பயன்படுத்திய செல்போன், லேப்டாப் உள்ளிட்ட மின் சாதனங்கள் அனைத்தையும் பரிசோதனை செய்ய வேண்டும்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் அனுமதியின்றி வெளியாட்கள் நுழைவதைத் தடுக்க கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டும். கண்காணிப்பு கேமராக்களை பாதுகாப்பு ஊழியர்கள் அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டும்.

பாலியல் கொடுமை தொடர்பான வழக்குகளை துணை ஆணையர் அல்லது உதவி ஆணையர் அந்தஸ்தில் உள்ள காவல்துறை அதிகாரிகள் விசாரிக்க வேண்டும். பெண்களிடையே ‘112 இந்தியா’ என்ற அவசரகால உதவி செயலி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். பாலியல் புகாரை உறுதிப்படுத்த பெண் மருத்துவர்கள் அடங்கிய குழுவினர் பாதிக்கப்பட்ட நபரை பரிசோதனை செய்ய வேண்டியது அவசியம். வழக்கு விசாரணையின்போது அனுபவம் வாய்ந்த வழக்கறிஞர்களை நியமிக்க வேண்டும்.

## 25 போதை மறுவாழ்வு மையங்கள் விரைவில் திறக்க திட்டம்

சென்னை, ஜன.3



அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டு வரும் போதை மறுவாழ்வு மையங்கள் ஓரிரு மாதங்களில் பயன்பாட்டுக்கு வரவுள்ளன. சென்னை கீழ்ப்பாக்கத்தில் அரசு மனநல மருத்துவமனை உள்ளிட்ட 7 அரசு போதை மறுவாழ்வு மையங்கள் உள்ளன.

இந்நிலையில், சென்னை, மதுரை, திருச்சி உள்ளிட்ட 25 மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளிலும் 20 படுக்கைகள் கொண்ட போதை மறுவாழ்வு மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதுதொடர்பாக சுகாதாரத் துறை அதிகாரிகளிடம் கேட்ட போது, “அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அமையும் மையங்களில் போதை பழக்கத்துக்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமின்றி, அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் உளவியல் சிகிச்சை அளிக்கப்படும். இந்த மையங்கள் ஓரிரு மாதங்களில் பயன்பாட்டுக்கு வரவுள்ளது” என்றனர்.

# உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு பெருங்களத்தூர் தெற்கு பகுதி திமுக சார்பில் பொதுக்கூட்டம்-நலத்திட்ட உதவி

பெருங்களத்தூர் ஜன.3




செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் தெற்கு பகுதி திமுக சார்பில் கழக இளைஞரணி செயலாளர் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் மற்றும் துணை முதல்வர் மாண்புமிகு உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் மாபெரும் பொதுக்கூட்டம் பெருங்களத்தூர் தெற்கு பகுதி சார்பாக எஸ்.சேகர் தலைமையில், பி..புகழேந்தி, ஆர்.ஓம்பிரகாஷ், வ.க. ரவிச்சந்திரன், ஜே.சாமுண்டிஸ்வரி, எஸ்.கமலா சேகர், எஸ். மதுமிதா மதன், எஸ்.ராஜேஷ்வரி சங்கர், டி.ஜெபதுரை, ஜே.குப்புசாமி, எஸ்.சிவகுமார், வி. யோபு, ஏ.பொற்செல்வி, ரவி, எடியப்பன், வரவேற்பில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி எம்எல்ஏ சிறப்பு பேச்சாளர்கள் போடி காமராஜ் மற்றும் சேப்பாக்கம் பிரபாகரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

உடன் துணை மேயர் கோ. காமராஜ், 4வது மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ், ஆர்.எஸ்.சங்கர் உள்ளிட்ட பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# உலக புகழ் பெற்ற பிள்ளையார்பட்டியில் புத்தாண்டு சிறப்பு வழிபாடு பக்தர்களுக்கு செட்டிநாடு முறையில் அறுசுவை அன்னதானம்

சிவகங்கை ஜன.3





உலக புகழ் பெற்ற பிள்ளையார்பட்டியில் 2025 ம் ஆண்டு ஆங்கில புத்தாண்டு சிறப்பு வழிபாடு நடைபெற்றது .தங்க கவசத்தில் எழுந்தருளிய அருள்மிகு கற்பக விநாயகர் தமிழகம் முழுவதும் இருந்து வருகை தந்துள்ள பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று சாமி தரிசனம் செய்தனர் .1300 க்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 18 வருடங்களாக 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே பிள்ளையார்பட்டியில் உலக பிரசித்தி பெற்ற கற்பக விநாயகர் கோவிலில் ஆங்கில புத்தாண்டு தினத்தை முன்னிட்டு அதிகாலை 4.15 மணி அளவில் நடை திறக்கப்பட்டது மூலவர் கற்பகவிநாயகர் தங்ககவச அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சி தரும் நிலையில் தமிழர்களின் முதல் கடவுளாக போற்றப்படுகின்ற விநாயகப் பெருமானை தரிசிக்க தமிழக முழுவதும் மட்டு மன்றி வெளிநாடு மற்றும் வெளி மாநிலங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வருகை தந்து நீண்ட வரிசையில் தங்க கவச அலங்காரத்தில் காட்சி தரும் கற்பக விநாயகரை தரிசித்து வருகின்றன இதே போல தற்போது கேரள மாநிலம் ஐயப்பன் கோவிலுக்கு ஏராளமான பக்தர்கள் விரதம் இருந்து சென்று வரும் பக்தர்கள் அவர்கள் செல்லும் வழியில் பிள்ளையார்பட்டி கற்பக விநாயகரையும் தரிசிக்க கோயில் வளாகத்தில் குவிந்து கற்பக விநாயகரை தரிசித்து வருகின்றனர் பக்தர்களின் வசதிக்காக கோயில் நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு பக்தர்களின் அடிப்படை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது காவல் துறை சார்பில் 30க்கும் மேற்பட்ட முக்கிய இடங்களில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணித்து வருகின்றனர். ஆங்கில புத்தாண்டு தினத்தை முன்னிட்டு பிள்ளையார்பட்டியில் 750 க்கு மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர் அரசு போக்குவரத்து கழகம் சார்பில் பிள்ளையார்பட்டிக்கு சிறப்பு பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகிறது

கற்பக விநாயகர் அன்னதான குழு சார்பாக கடந்த 18 ஆண்டுகளாக 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு 55 சமையல் கலைஞர்கள் கொண்டு காலை 6 மணி முதல் கேசரி, இட்லி, ஊத்தாப்பம், பொங்கல்,வடை காலை உணவாகவும், மதியத்திற்கு வெஜிடபிள் பிரியாணி, தயிர், சாம்பார், லெமன், வடை என செட்டிநாடு ஸ்பெஷல் அறுசுவை விருந்து மாலை 5 மணி வரை பிரம்மாண்டமான விருந்து அளிக்கப்பட்டு வருகிறது.

# தேவகோட்டை கல்லங்குடி கிராமத்தில் டிச.6 அன்று மக்கள் தொடர்பு முகாம்

தேவகோட்டை ஜன.3



சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், தேவகோட்டை உள்வட்டம், கல்லங்குடி குரூப், கல்லங்குடி கிராமத்தில், வருகின்ற 08.01.2025 அன்று காலை 10.00 மணியளவில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெறவுள்ளது.

மக்கள் தொடர்பு முகாமில், அரசுத்துறை அலுவலர்களை ஒருங்கிணைத்து அரசின் திட்டங்களை துறை சார்ந்த முதன்மை அலுவலர்களைக் கொண்டு, பொதுமக்களுக்கு திட்டங்கள் குறித்து எடுத்துரைத்து, தகுதிவாய்ந்த பயனாளிகளை பயன்பெறச் செய்வதே இம்மக்கள் தொடர்பு முகாமின் நோக்கமாகும். எனவே, மேற்கண்ட கிராமத்தை சேர்ந்த பொதுமக்கள் அனைவரும் நடைபெறவுள்ள மக்கள் தொடர்பு முகாமில் கலந்து கொண்டு, அரசின் திட்டங்களை பெறுவதற்கான வழிமுறைகளை அறிந்து கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

# கல்லலில் மூன்று நூல்களின் வெளியீட்டு விழா



கல்லல் ஜன.3

கல்லலில் மூன்று நூல்களின் வெளியீட்டு விழா நடைபெற்றது.. சிவகங்கை மாவட்டம் கல்லலில் உள்ள கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் மகா பிரபு எழுதிய "பட்டாசு","மகாராஜா' மற்றும் "மனிதம்" நூல் வெளியீட்டு விழா 2024 டிசம்29 அன்று நடைபெற்றது.மனிதம் என்ற தொகுப்பாசிரியர் மகா பிரபு தொகுத்து எழுதிய உறவுகள் என்ற நூலில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் செந்தில் நாதன் இவ்விழாவிற்கு தலைமையேற்று மூன்று நூல்களையும் வெளியிட்டார். இவர் தனது உரையில் தன் வாழ்வில் நூல்கள் எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்தது எனவும், மாணவர்களின் கல்வி சார்ந்த வளர்ச்சிக்கு பொதுமக்களின் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு நூல்கள் எவ்வளவு சிறந்தது என்பதை சுவாராஸ்யத்துடன் எடுத்துக் கூறினார்.

மனிதம் என்ற நூல் 25 எழுத்தாளர்களுடன் சேர்ந்து மகா பிரபு எழுதி தொகுத்த நூலாகும். இது உறவுகள் என்ற நூலில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. மனிதம் நூல் மூலம் 23 புதிய எழுத்தாளர்கள் தமிழ் இலக்கிய உலகத்திற்கு கிடைத்துள்ளனர். கடந்த ஆண்டு இதுபோல் எழுதப்பட்ட "உறவுகள்" நூல் மூலம் 22 புதிய எழுத்தாளர்கள் கிடைத்தது குறிப்பிடத்தக்கது. புலவர் மெய்யாண்டவர் நூலினை இணைந்து வெளியிட தலைமையாசிரியர் அழகப்பன் நூலினை பெற்றுக் கொண்டார். கவிஞர் தமிழ்க்கனல் இந்நூலுக்கு மதிப்புரை வழங்கினார்.மகா பிரபு எழுதிய இரண்டாவது கவிதை நூல் "பட்டாசு" மற்றும் இவரது இரண்டாவது நுண்கதை நூல் "மகாராஜா" இதே விழாவில் வெளியிடப்பட்டது .

"பட்டாசு" நூலை புலவர் காளிராசா வெளியிட நல்லாசிரியர் வனிதா பெற்றுக் கொண்டார். தமிழாசிரியர் துஷ்யந்த் சரவணராஜ் இந்நூலுக்கு மதிப்புரை வழங்கினார்.

"மகாராஜா" என்ற நூலை மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்வி மற்றும் பயிற்சி நிறுவன மூத்த விரிவுரையாளர் முனைவர் சேவற்கொடியோன் வெளியிட காரைக்குடி சிக்ரி விஞ்ஞானி அசோக் நூலினை பெற்றுக் கொண்டார். முத்து டான்ஸ் அகாடமி நிறுவனர் முத்துமாரி இளஞ்செழியன் இந்நூலுக்கு மதிப்புரை வழங்கினார். இவ்விழாவில் பல்வேறு துறைகளில் சிறப்பாக பணிபுரிந்தவர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.இராசு வரவேற்புரை வழங்க ஆரோக்கியசாமி நன்றியுரையாற்றினார்.

சிவகங்கை கவுன்சிலர் ராஜா, சிவகங்கை ஒன்றிய செயலாளர் செல்வமணி, நடராஜபுரம் சொசைட்டி முன்னாள் தலைவர் சேவியர் தாஸ், முனைவர் உஷா, முனைவர் மெய்யாத்தாள், தலைமையாசிரியை சாந்தி, உதவிப் பொறியாளர் பிரேம் சங்கர், மரபுவழி மருத்துவர் விஜயசாரதி, தொழில் முனைவோர் அமலன், ஜேசுதாஸ் வாழ்த்துரை வழங்கினர்.

# தேவதானப்பட்டியில் அம்பேத்கர் எழுச்சி இயக்கத்தின் சார்பில் அறிவர் அம்பேத்கர் நூலகம் மற்றும் படிப்பகம் திறப்பு விழா

பெரியகுளம் ஜன.3



தேவதானப்பட்டியில் புரட்சியாளர் அம்பேத்கர் எழுச்சி இயக்கத்தின் சார்பில் அறிவர் அம்பேத்கர் நூலகம் மற்றும் படிப்பகம் திறப்பு விழா : டி.எஸ்.பி நல்லு திறந்து வைத்தார்

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே தேவதானப்பட்டியில் மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அறிவர் அம்பேத்கர் நூலகம் மற்றும் படிப்பகம் திறப்பு விழா நடைபெற்றது.பெரியகுளம் உட்கோட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் நல்லு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நூலகம் மற்றும் படிப்பகத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். இந்நிகழ்வில்

மா.பால்ராஜ் (பள்ளி கல்வித் துறை) வரவேற்புரையாற்றினார். புரட்சியாளர் அம்பேத்கர் எழுச்சி இயக்க நிர்வாகி கார்த்திக் இயக்க விளக்கவுரையாற்றினார். சி. எஸ். ஐ துவக்கப்பள்ளி ஆசிரியர் வி.ஸ்டெல்லா சின்னையா, தேவதானப்பட்டி பேரூராட்சி தலைவர் ரா.முருகேஸ்வரி ராமையா, தலைமை ஆசிரியர் பூங்கொடி கணேசன், பெரியகுளம் விக்டோரியா நினைவு அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் அ.ஜெ.கோபிநாத், தேவதானப்பட்டி காவல் ஆய்வாளர் அப்துல்லா, சார்பு ஆய்வாளர் வேல் மணிகண்டன், எழுத்தாளர்கள் அறிவழகன், அருண் அழகு, அண்ணா பல்கலைக் கழக உதவி பேராசிரியர் முனைவர்.வீ.பிரேம் ஆனந்த் ஆகியோர் பேசினர்.

புரட்சியாளர் அம்பேத்கர் எழுச்சி இயக்க நிர்வாகி பிரேம் குமார் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்திருந்தார். சரண்ராஜ் நன்றி கூறினார். இந்நிகழ்வில் மாணவ மாணவிகள், இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர் .

# பழனி நகர் மன்ற கூட்டத்தில் கண்ணில் கருப்பு துணி கட்டிய பெண் கவுன்சிலரால் பரபரப்பு

பழனி ஜன.3



திண்டுக்கல் மாவட்டம் பழனி நகராட்சியில் நகர் மன்றத் தலைவர் உமாமகேஸ்வரி தலைமையில் நகர்மன்ற கூட்டம் நடைபெற்றது. நகர்மன்றக் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தொடர்ந்து கவுன்சிலர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு நகராட்சி அதிகாரிகள் பதில் அளித்தனர். கூட்டம் முடியும் தருவாயில் 25வது வார்டு அதிமுக பெண் கவுன்சிலரான ஜெனத்துல் பிர்தோஷ், சென்னை அண்ணா பல்கலைகழக மாணவிக்கு நடைபெற்ற பாலியல் துன்புறுத்தல் சம்பவத்தை கண்டித்தார்.

தொடர்ந்து அச்சம்பவம் குறித்து பேசியபோது திமுக கவுன்சிலர்கள் கடுமையாக எதிர்த்தனர். மேலும் அவரிடம் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனை தொடர்ந்து நகர்மன்றத் தலைவர் உமா மகேஷ்வரி கூட்டம் முடிந்ததாக அறிவித்தார். இதை அடுத்து தேசியகீதம் பாடிய போது அதிமுக பெண் கவுன்சிலர் கருப்பு துணியால் தனது கண்களைக் கட்டிக் கொண்டு நின்றதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்த கூட்டத்தில் நகராட்சி ஆணையர், நகராட்சி அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# நந்திவரம் கூடுவாஞ்சேரி முன்னாள் பேரூராட்சி தலைவர் நினைவு நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவி வழங்கல்

கூடுவாஞ்சேரி ஜன.3




நந்திவரம் கூடுவாஞ்சேரி முன்னாள் பேரூராட்சி தலைவர் எம்.கே.தண்டபாணி நினைவு நாளை முன்னிட்டு ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் விழா நடைபெற்றது

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றிய முன்னாள் திமுக ஒன்றிய செய லாளர் நந்திவரம் கூடுவாஞ்சேரி முன்னாள் பேரூராட்சி மன்ற தலைவர் மாநாடு எம்.கே.தண்டபாணி மூன்றாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு பொது மக்களுக்கு தண்டபாணி வசந்தி அறக்கட்டளை சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி கூடுவாஞ்சேரியில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு நந்திவரம் கூடுவாஞ்சேரி நகர மன்ற தலைவர் எம்.கே.டி.கார்த்திக் தலைமை தாங்கினார் நந்திவரம் கூடுவாஞ்சேரி நகர மன்ற துணைத் தலைவர் வழக்கறிஞர் ஜி.கே. லோகநாதன் நகர மன்ற உறுப்பினர்கள் நகர திமுக நிர்வாகிகள் ஆகியோர் முன்னிலை வகித்தனர் சிறப்பு அழைப்பாளராக காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கா. செல்வம், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் ஆகியோர் கலந்து கொண்டு பத்து பேருக்கு நான்கு சக்கர தள்ளுவண்டி வாகனம் 12 பேருக்கு தையல் இயந்திரம் 10 பேருக்கு இஸ்திரி பெட்டி ஆகிய உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார் .

முன்னதாக கூடுவாஞ்சேரி ஜிஎஸ்டி சாலையில் தண்டபாணி நினைவிடம் வரை மௌன ஊர்வலம் நடந்தது இதில் ஏராளமான திமுக நிர்வாகிகள் நகர மன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..

# ஆர் எஸ் மங்கலம் சுற்று வட்டார பகுதியில் அறுவடைக்கு தயாரான நெற்கதிர்கள் சேதம் அடைவதாக விவசாயிகள் வேதனை

ஆர்.எஸ்.மங்கலம், ஜன.03



இராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் தாலுகா ஆர்.எஸ்.மங்கலம், சனவேலி, பகவதிமங்கலம், ஆயங்குடி, கோவிந்தமங்கலம், சாத்தனூர், ஆனந்தூர், கூடலூர், மேல்பனையூர், திருத்தேர்வளை, கொக்கூரணி, செவ்வாய்பேட்டை, கற்காத்தகுடி, சிருநாகுடி, ஏ.ஆர்.மங்கலம் சுற்று வட்டார பகுதியில் கடந்த மூன்று வாரங்களுக்கு முன்பு பெய்த தொடர் மழையின் காரணமாக கண்மாயில் மழைநீர் முழு கொள்ளளவை எட்டி நிலையில் மறுகால் வருவதால் விவசாய விவசாய நிலங்களில் மழை நீர் அதிகப்படியாக தேங்கி இருப்பதால் விவசாயிகள் தேங்கிய தண்ணீரை வெளியேற்றும் பணியை மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் கடந்த இரு தினங்களாக பெய்து வரும் மழையால் ஒரு வார காலத்திற்குள் அறுவடைக்கு தயாரான நெற்கதிர்கள் தண்ணீரில் மூழ்கி சேதம் அடைவதாகவும் இதனால் அதிக அளவில் நஷ்டம் ஏற்படும் எனவும் விவசாயிகள் வேதனை அடைந்து உள்ளனர்.

# காட்பாடி சித்தூர் பேருந்து நிலையத்தில் ஆங்கில புத்தாண்டு கொண்டாடிய வேலூர் மாவட்ட எஸ்.பி.

வேலூர் ஜன.3



வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, தாராபடவேடு, சித்தூர் பேருந்துநிலையத்தில் 01/01/25 அன்று நள்ளிரவு 12 மணி அளவில் வருகை தந்த வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மதிவாணன் கேக் வெட்டி ஆங்கிலப் புத்தாண்டை சக காவலர்களுடன் கொண்டாடி மகிழ்ந்தார்.

ஆங்கிலப் புத்தாண்டை வரவேற்கும் விதமாக இந்த எளிய விழா சித்தூர் பேருந்து நிலையத்தில் நடந்தது குறிப்பிடத்தக்கது. ஆங்கிலப் புத்தாண்டையொட்டி நடந்த இந்த நிகழ்ச்சியில் காட்பாடி காவல் துணை கண்காணிப்பாளர் பழனி, காட்பாடி காவல் ஆய்வாளர் ஆனந்தன், காட்பாடி போக்குவரத்து பிரிவு காவல் ஆய்வாளர் கோவிந்தசாமி, உதவி ஆய்வாளர் மிதிலேஷ் குமார் மற்றும் சட்டம் ஒழுங்கு உதவி ஆய்வாளர்கள் மற்றும் தனிப் பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் தலைமை காவலர்கள் உள்ளிட்ட போலீசார் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஆங்கிலப் புத்தாண்டு பிறந்ததை கொண்டாடும் வகையில் இந்த கேக் வெட்டி பொதுமக்கள் மற்றும் வாகனங்களில் பயணித்த பயணிகளுக்கும் போலீசார் கேக் விநியோகம் செய்து தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

# ஜமீன்தாரணி காமூலம்மாள் மேல்நிலை பள்ளி புதிய தலைவர், செயலாளர் தேர்வு



தேனி, ஜன.3

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள 125 ஆண்டுகளுக்கு மேல் பழமையும் பாரம்பரியமும் மிக்க ஜமீன்தாரணி காமூலம்மாள் மேல்நிலைப் பள்ளியில் இன்று புதிய தலைவர் மற்றும் செயலாளர் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்றனர்.

புதிய தலைவராக செந்தில் தியாகராஜன் மற்றும் செயலாளராக இனாயத் உசேன் கான் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவியேற்றனர் அவர்களுக்கு நிர்வாகிஸ்தார்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் வாழ்த்துக்கள் தெரிவித்தனர் ZKM பள்ளியில் புதிய நிர்வாகிகளுக்கு போடி பத்திரிக்கையாளர்கள் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.



இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை புதிய கட்டிடத்தில் ஏற்பட்ட மின்கசிவால் நேற்று இரவு திடீரென தீப்பற்றி எரிந்ததில் பாதிப்படைந்த பகுதிகளை ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் பார்வையிட்டு மருத்துவமனை நிர்வாகிகளிடம் விளக்கம் கேட்டறிந்து மேற்கொள்ள வேண்டிய அடுத்தகட்ட ஆயுத்த பணிகளை விரைந்து செயல்படுத்த மருத்துவர்களுடன் ஆலோசனை நடத்தினார்.



தூத்துக்குடி மாநகராட்சியான வடக்கு மண்டலத்தில் மாதாந்திர பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் பல்வேறு மனுக்களை பெற்றுக் கொண்டு தீர்வு காண்பதாக உறுதியளித்தார்..



மதுரையில் பொதுமக்களுடன் புத்தாண்டை கொண்டாடிய மதுரை மாநகர காவல் ஆணையர் 2025 புத்தாண்டு தினத்தை முன்னிட்டு பெரியார் பேருந்து நிலையம் மற்றும் காளவாசல் சந்திப்பில் மாநகர காவல் ஆணையர் முனைவர் ஜெ.லோகநாதன் இ.கா.ப., தலைமையில் கேக் வெட்டி புத்தாண்டு தினம் சிறப்பாக பொதுமக்களுடன் கொண்டாடியும் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்தார். நிகழ்வின் திரளான பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் கலந்து கொண்டனர். இதேபோல் மதுரை நகரில் பல்வேறு இடங்களில் மதுரை மாநகர காவல் துணை ஆணையர் (தெற்கு), துணை ஆணையர் (தலைமையிடம்), துணை ஆணையர் (போக்குவரத்து), காவல் உதவி ஆணையர்கள், காவல் ஆய்வாளர்கள் மற்றும் இரவு பணி காவலர்கள் பொதுமக்களுடன் இணைந்து மதுரை மாநகரின் பல்வேறு பகுதிகளில் புத்தாண்டை கேக் வெட்டி கொண்டாடி மகிழ்ந்தனர்.

# பெரியகுளத்தில் பசுமைக்குடிலில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி பற்றிய கருத்தரங்கம்

தேனி ஜன.3



தேனி மாவட்டம், பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பசுமைக் குடிலில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி பற்றிய ஒரு நாள் கருத்தரங்கம் மாவட்ட மாவட்ட ஆட்சியர் ஆர்.வி.ஷஜீவனா தலைமையில் நடைபெற்றது.

விவசாயிகளின் குறைதீர்க்கும் கூட்டத்தில் உயர் சாகுபடி தொழில் நுட்ப சிறப்புப் பயிற்சி நடத்த விவசாயிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மாவட்ட ஆட்சியர் அறிவுரையின்படி இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டு, நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது,

மக்களின் ஊட்டச்சத்துப் பாதுகாப்பினை உறுதி செய்வதில் அதிகளவு பங்குவகிக்கும் பழங்கள், காய்கறிகள். உள்ளிட்ட பல்வேறு தோட்டக்கலை பயிர்களின் சாகுபடியினை ஊக்குவிப்பதற்காக, தமிழ்நாடு அரசின் சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தோட்டக்கலை பயிர்கள் விவசாய செழிப்பு மற்றும் நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

தோட்டக்கலைப் பயிர்கள் விவசாயிகளுக்கு மாற்று பயிர் சாகுபடி செய்வதற்கான வாய்ப்பை வழங்குகிறது. விவசாயப் பொருட்களின் மொத்த ஏற்றுமதியில் தோட்டக்கலை பயிர்களின் பங்கு இன்றியமையாததாக உள்ளது. மேலும், கார்போஹைட்ரேட்டுகள், தாதுக்கள், நுண்ணூட்டச்சத்துக்கள், புரதங்கள், வைட்டமின்கள், கொழுப்புகள், நார்ச்சத்து, கரிம அமிலங்கள், நிறமிகள் மற்றும் ஆக்ஸிஜனேற்றிகள் உள்ளிட்ட முக்கியமான உணவு ஊட்டச்சத்துகூறுகள் மற்றும் மருந்துகள் ஆகியவற்றின் முக்கிய ஆதாரமாக தோட்டக்கலைப் பயிர்கள் உள்ளன.

தோட்டக்கலைப் பயிர்கள் குறுகிய காலப் பயிர்களாகும். தோட்டக்கலைப் பயிர்களின் மகசூலைப் பெருக்க அரசின் சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பசுமைக்குடில் மூலம் தோட்டக்கலை பயிர்களை வளர்ப்பது குறித்து வேளாண் துறை அலுவலர்களால் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட உள்ளது இதனை விவசாயிகள் பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார். நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி வேளாண்மையை முன்னேற்றம் செய்வது தொடர்பாக தமிழ்நாடு அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து வேளாண்துறை அலுவலர்களால் எடுத்துரைக்கப்பட்டது. பழங்கள், காய்கறிகள், வாசனைத்திரவியப் பயிர்கள் மற்றும் மலர்ப்பயிர்களின் உற்பத்தி பெருக்குவதற்கான தொழில் நுட்பப் பயிற்சியினை கல்லூரி பேராசிரியர்கள் வழங்கினார்கள். இக்கருத்தரங்கில் 340க்கும் மேற்பட்ட விவசாயப் பெருமக்கள் மற்றும் மலைவாழ் பகுதி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் விவசாயிகளுக்கு பழமரக்கன்றுகள் வழங்கினார்கள்.

இக்கருத்தரங்கில் வேளாண்மைத்துறை இணை இயக்குநர் சாந்தாமணி, தோட்டக்கலை உதவி இயக்குநர் நந்தினி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) வளர்மதி, பேராசிரியர்கள் முனைவர் நாகேஸ்வரி, முனைவர் முத்துராமலிங்கம், முனைவர் சுகன்யா மற்றும் ரவிச்சந்திரன், முனைவர் லெனின்ராஜா மற்றும் விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# புதுவயலில் எய்டு இந்தியா நிறுவனத்தின் சார்பாக கிராமப்புற மாணவிகளுக்கு சைக்கிள் வழங்கும் விழா

சிவகங்கை ஜன.3




சிவகங்கை மாவட்டம் புதுவயல் பேரூராட்சியில் இந்திய வளர்ச்சி இயக்ககத்தின் சார்பாக கிராமப்புற மாணவிகளுக்கு சைக்கிள் வழங்கும் விழா நடைபெற்றது.

சிவகங்கை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மாலா தலைமை வகித்தார். புதுவயல் பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் பகுருதீன் அலி முன்னிலை வகித்தார். யுரேகா ஆசிரியை திவ்யா வரவேற்றார். புதுவயல் தொட்டி நாயக்கன் குடியிருப்பு சிறுசாக்க வயல் பெரியவேங்காவயல் மேலமணக்குடி மற்றும் புதுவயல் ஆகிய கிராமங்களை சேர்ந்த ஏழை எளிய பொருளாதாரத்தில் பின்தங்கிய பதினைந்து மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கப்பட்டது.

சிவகங்கை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மாலா பேசும்போது எய்டு இந்தியா நிறுவனம் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு ஏழை எளிய மாணவிகளின் கல்வி நலன் மேம்பட காலை மற்றும் மாலை நேரங்களில் யுரேகா கற்றல் மையங்கள் மூலம் வகுப்புகளை நடத்தி வருகிறது. தொடர்ந்து உயர் கல்வி பயில கல்வி உதவித் தொகை ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

பெண் குழந்தைகளின் கல்வி நிலை மேம்படவும் மற்றும் இடைநிற்றலை தடுக்கவும் வறுமை நிலையிலுள்ள 15 மாணவிகளுக்கு 6300 மதிப்பில் சுமார் 94500 மதிப்புள்ள மிதிவண்டிகள் வழங்கப்படுகிறது. கிராமப்புற மாணவிகள் விளையாட்டு துறையில் ஆர்வம் ஏற்பட எய்டு இந்தியா ஸ்போர்ட்ஸ் கேர்ள்ஸ் என்னும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது என்று கூறினார். ஒன்றிய கருத்தாளர் ரேவதி நன்றி கூறினார்.

இந்நிகழ்வில் புதுக்கோட்டை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜா மண்டல ஒருங்கிணைப்பாளர் ராஜபாண்டியன் யுரேகா ஒன்றிய கருத்தாளர்கள் திவ்யபாரதி யுரேகா ஆசிரியர்கள் உய்யவந்தாள் பிரியா அபிநயா கோகிலா அனுசுயா சுதந்திரா கற்பகம் பள்ளி மாணவமாணவியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# மதுரை மாவட்ட வெள்ளாளர் முதலியார் சமூக அறக்கட்டளையின் ஆறாம் ஆண்டு விழா

மதுரை: ஜன.3



மதுரை கோ புதூர் பரசுராமன் பட்டி மூன்றுமாவடி பகுதியில் VPM திருமண மஹாலில் வெள்ளாளர் முதலியார் சமூக அறக்கட்டளையின் ஆறாம் ஆண்டு விழா நடைபெற்றது.

இவ்விழாவிற்கு வணிகவரி மற்றும் பத்திர பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி குத்து விளக்கு ஏற்றி துவக்கிவைத்தார், சுப்பிரமணியம் பிள்ளை ஸ்தாபகர் மற்றும் முதல்நிலைத் தலைவர் தலைமை வகித்தார். முன்னிலைகோபி பிள்ளை துணைத்தலைவர் கோபி மெட்டல், சிறப்பு அழைப்பாளராக சோமசுந்தரம் பிள்ளை தொழிலதிபர், மீனாட்சிசுந்தரம், தனராஜ் அலங்காநல்லூர் ஒன்றியசெயலாளர், நிகழ்ச்சிக்கு பழனிச்சாமி பிள்ளை எஸ் பி எஸ் கன்சல்டிங் வரவேற்புரையாற்றினர் அறக்கட்டளையின் ஆண்டு அறிக்கையை குமரன் பிள்ளை செயலாளர் எம் எம் சேர்லேண்ட் அறிவித்தார். அதனை தொடர்ந்து நிதிநிலை அறிக்கையை அம்பலவாணன் பிள்ளை பொருளாளர் தெரிவித்தார். மோகன் குமார் மதுரை வழக்கறிஞர் சங்கம் செயலாளர் பாரி பாலாஜி பிஜிஎம் மருத்துவமனை பாலமுருகன் குரு மருத்துவமனை சிறப்புரையாற்றினர்கள்.

மேலும் சமுதாய உறுப்பினர்களின் 10 ம்வகுப்பு மற்றும் 12ம்வகுப்பு இறுதி தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு பரிசுத்தொகை வழங்கி பாராட்டினர்.

பல்வேறு பகுதிகளில் இருந்தும் சங்க உறுப்பினர்கள் பெரியவர்கள் சிறியவர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

# முன்னாள் படைவீரர்களை சார்ந்தோருக்கு நான் முதல்வன் திட்டத்தின் கீழ் திறன் பயிற்சி

தேனி ஜன.3



தேனி மாவட்ட முன்னாள் படைவீரர்களை சார்ந்தோருக்கு நான் முதல்வன் திட்டத்தின்கீழ், வேலைவாய்ப்பற்ற 16 முதல் 35 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு மாவட்டத் திறன் பயிற்சி அலுவலகம் வாயிலாக பயிற்சி வழங்கப்பட உள்ளது.

மெஷினிஸ்ட் கிரைண்டர், மேனுபேக்சரிங் பிராசஸ் கண்ட்ரோல் ஆட்டோமேசன் மற்றும் வெல்டர் பயிற்சி வகுப்புகள் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் தேனியிலும், பிட் எலக்ட்ரிகல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் அசெம்பிளி, மேனுபேக்சரிங் ப்ராசஸ் கண்ட்ரோல் மற்றும் ஆட்சோமேசன் பயிற்சிகள் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் போடிநாயக்கனூரிலும், கோபா மற்றும் கேண்ட் எம்பராய்டரி பயிற்சிகள் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், (மகளிர் மட்டும்) ஆண்டிபட்டியிலும், கிரிட்டிக்கல் கேர் நர்சிங், ஜெனரிக் கேர் நர்சிங், ஜெனரல் டியுட்டி அஸிஸ்டண்ட், டையாபெட்ஸ் எஜுகேட்டர் மற்றும் ஆபரேஷன் எக்ஸ்கியுட்டிவ் பயிற்சிகள் நலம் மருத்துவமனை தேனியிலும் நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் சேர விருப்பமுள்ள தேனி மாவட்டத்திலுள்ள முன்னாள் படைவீரர்களின் 16 முதல் 35 வயதுக்குட்பட்ட மகன் மற்றும் மகள் தங்களது கல்விச்சான்று, ஆதார் அட்டை மற்றும் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட அலைபேசி எண் ஆகிய ஆவணங்களுடன் மாவட்டத் திறன் பயிற்சி அலுவலகத்திற்கு நேரில் சென்று தங்களது விருப்பத்தைத் தெரிவித்து பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் ஆர்.வி. ஷஜீவனா, தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம் வாலாந்தரவை விளக்கு அருகே நேற்று முன்தினம் ஆம்புலன்ஸ் மீது லாரி மோதி விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்,
உடற்கூறு ஆய்விற்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ள உடல்களை ராமநாதபுரம் சட்டமன்ற
உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் பார்வையிட்டு உறவினர்களுக்கு ஆறுதல் கூறினார். இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி மற்றும் மக்கள் பிரதிநிதிகள், கட்சி நிர்வாகிகள் அனைவரும் உடனிருந்தனர்.



## விட்டல் தொழிற்கல்வி நல அமைப்பின் தமிழ்நாடு மாநில ஒருங்கிணைபாளர் நியமனம்

பழனி ஜன.3

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் நடைபெற்ற விட்டல் தொழிற்கல்வி நிறுவனங்களின் திண்டுக்கல் மாவட்ட ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

நிகழ்வில் விசி விஆர்டி கவுன்சிலின் தலைவர் சம்பத் குமார் கலந்து கொண்டார். பாராமெடிக்கல் மற்றும் தொழிற்கல்வி முன்னேற்றம் தொடர்பாக கலந்துரையாடல் நடைபெற்றது. கூட்டத்தில் விட்டல் அமைப்பின் (தொழிற்கல்வி மற்றும் பாராமெடிக்கல் நல சங்கம்) தமிழ்நாடு மாநில ஒருங்கிணைப்பாளராக பழனி கோல்டன் கல்வி நிறுவத்தை சார்ந்த மாசிலாமணி காளியப்பன் பொறுப்பு வழங்கப்பட்டது.



சிறப்பு விருந்திராக மகேஸ் கார்த்திக் பள்ளி இயக்குனர் கார்த்திகேயன், விட்டல் மாவட்ட தலைவர் அன்னை பாராமெடிக்கல் ரவிசந்திரன், டிசம்பர் மூன்று இயக்க மாநில துணை தலைவத் மோகன் மற்றும் லயன் பாரதி கண்ணன், நானோ டெக் லேப் தங்கராஜ், கலந்து கொண்டனர். இதில் திண்டுக்கல் மாவட்டத்தை சார்ந்த பாரமெடிக்கல் கல்லூரி தாளாளர்கள் கலந்து கொண்டனர்.

பழனி பாரமெடிக்கல் அசோசியேசன் தலைவராக பாலா லேப் சுதா கவியரசன் கலந்து நியமிக்கப்பட்டார்.



மதுரை மாவட்டம் அவனியாபுரம் ஜல்லிக்கட்டு நடைபெறவதை முன்னிட்டு முகூர்த்தக்கால் நடும் பணியில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி இன்று கலந்து கொண்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா இ.ஆ.ப., , மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மாநகர காவல் ஆணையாளர் லோகநாதன், மாநகராட்சி ஆணையாளர் ச.தினேஷ்குமார் இ.ஆ.ப., , உதவி ஆட்சியர்(பயிற்சி) வைஷ்ணவிபால் இ.ஆ.ப., , மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், மாநகராட்சி துணை மேயர் நாகராஜன், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல் ஆகியோர் உடன் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகிலுள்ள கோவிலூர் துணைமின் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மாதாந்திர மின் பராமரிப்பு காரணமாக நாளை (ஜன.4) கோவிலூர், மானகிரி, இளங்குடி, தலக்காவூர், பாதரக்குடி, குன்றக்குடி, நெசவாளர் காலனி, ஆலங்குடி உள்ளிட்ட பகுதிகளுக்கு மின்விநியோகம் இருக்காது என மின்செயர்ப்பொறியாளர் லதா தேவி அறிவித்துள்ளார்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணையில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளின் எல்லைகள் விரிவாக்கம் மற்றும் புதிய நகராட்சிகள், பேரூராட்சிகள் அமைத்துருவாக்கம் தொடர்பாக ஐந்து அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளது.தமிழகத்தில் புதிதாக உருவாக்கப்படும் 25 பேரூராட்சி பட்டியல்களை தமிழக அரசு வெளியிட்டுள்ளது அதில் சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் இடம் பெற்றுள்ளது.

## வேலூரில் 11107 கடை எண் கொண்ட அரசு மதுபான கடை மது பாட்டிலில் விஷப்பூச்சி! அதிர்ச்சியடைந்த மது பிரியர்

வேலூர் ஜன.3

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, ஜி ஆர் பாளையம், ஊசூர் அடுத்த இரண்டு ஏரிகோடி அருகே உள்ள 11107 கடை எண் கொண்ட அரசு மதுபான கடையில் மதுப்பிரியர் ஏ.எஸ். ஐ.ஓ ASIO ட்ரிபிள் செலக்ட் வொட்கா 180ml கொண்ட மதுவை வாங்கும்போது சுமார் இருள் சூழ்ந்த நேரம் மற்றும் லேசான மழை காரணத்தால் வீட்டிற்கு வந்து அந்த பாட்டிலை சாப்பிட முற்படும்போது அதில் விஷப்பூச்சி இருந்தது தெரிய வந்துள்ளது. அதன் விலை ரூ.280 ஆகும், ஆனால் இந்த மதுவை ரூ.285 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளனர். கூடுதலாக ஐந்து ரூபாய் லஞ்சமாக வசூல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்த மது பாட்டில் பெரும் போது இணைய வழி மூலமாக பணம் செலுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.



மதுப்பிரியர் இந்த பாட்டிலை பிரியமாக உட்கொள்ள முயலும் போது உள்ளே விசப்பூச்சி உள்ளதை பார்த்து அதிர்ச்சி அடைந்துள்ளனர். இது குறித்து அனுகிய போது இது இப்படி வருவதெல்லாம் இது தூசி தான் இதெல்லாம் சகஜம் தான் என அலட்சியமாக பதில் அளித்தது தெரியவந்துள்ளது.

இது குறித்து தீபாவளி பண்டிகை என்று பிரியத்துடன் மது அருந்தலாம் என நினைத்து இது போன்ற செயல் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாக்கியுள்ளார்கள் என தெரிவித்தனர். இது போன்று பல்வேறு வகை பாட்டில்களில் இருப்பதை அவ்வப்போது செய்தியாக வெளிவருவது வழக்கம், இது குறித்து ஏதேனும் உயிருக்கும் மற்றும் உடலுக்கு, உடல் உபாதை பக்க விளைவுகள், வயிற்றுப்போக்கு, வாந்தி, மயக்கம், என ஏதேனும் உயிருக்கு ஆபத்து நேர்ந்திருந்தால் என்னவாகும் என்பதை உணர வேண்டும் இந்த அரசு, இந்த செயலை ஒரு நிறுவனத்திடம் ஒப்பந்த அடிப்படையில் அரசே பெற்று விற்பனை செய்வது அதுவும் உயர் பதவி ஊழியர்கள் உள் உட்கொள்ளும் பொருட்களை முறையாக கண்காணிக்காமல் இதுபோன்ற அலட்சியமாக வேறு நிறுவனத்திடம் இருந்து கொள்முதல் செய்து கொண்டு வந்து வைத்து விற்பனை செய்வது மிகுந்த வேதனைக்குரியதாகும். இந்த நிறுவனத்தின் மீதும் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அரசு உயர் பதவி ஊழியர் மீதும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்டவர் கோரிக்கை விடுத்துள்ளார். இந்த தீபாவளி பண்டிகையொட்டி வேலூரில் மட்டும் சுமார் ரூ.12 கோடிக்கு விற்பனை நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இது போன்று விஷப்பூச்சிகள் கலந்த மது பாட்டில்கள் சாமானிய மதுப்பிரிய மக்களுக்கு வழங்குவது சரியானதா பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் மதுப்பிரியர்கள் வேதனை தெரிவித்து வருகின்றனர்.

கள்ளக்குறிச்சியை தொடர்ந்து இதுபோன்ற அலட்சிய போக்குக்கு நீதிமன்றம் உரிய நடவடிக்கை எடுத்து தரமான மதுக்களை வழங்க வேண்டுமெனவும், மது பாட்டில்கள் மீது ரூபாய் 5, 10 அதற்கும் மேற்பட்ட தொகைகள் பெறுவது தடுத்துநிற்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மது பிரியர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க கோரிக்கை வைத்து வருகின்றனர்.

## தூத்துக்குடி சட்டமன்ற தொகுதிகளில் புதிய திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டி முடிவுற்ற திட்டப் பணி திறந்து வைத்த அமைச்சர்

தூத்துக்குடி ஜன.3

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் மற்றும் திருவைகுண்டம் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட 7 இடங்களில் பல்வேறு நிதித் திட்டங்களின் கீழ், புதிய திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளை மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா.ஆர்.ராதாகிருஷ்ணன் மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், தலைமையில் பொது மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

அதன்படி, திருச்செந்தூர் மற்றும் திருவைகுண்டம் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில், அதாவது திருச்செந்தூர் நகராட்சியின் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.36 இலட்சம் மதிப்பீட்டில் திருச்செந்தூர் பேருந்து நிலைய ஓடுதளம் மேம்பாட்டுப் பணிகளை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியம் கோவங்காடு ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ.13.16 இலட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடை கட்டடத்தினைத்



திறந்து வைத்து, அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி, சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை வழங்கி தொடங்கி வைத்தார். மேலும், ஷிதிசி நிதித் திட்டத்தின் கீழ் ரூ.10 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர் தேக்கத் தொட்டியினையும், திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியம் பழையகாயல் ஊராட்சியில் அனைத்துகிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.13.57 இலட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டடத்தினையும், 15வது நிதிக்குழு மானியத் திட்டத்தின் கீழ் ரூ.8.70 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர் தேக்கத் தொட்டியினையும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

தொடர்ந்து, திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியம் பேரூர் ஊராட்சியில் RGSA நிதித் திட்டத்தின் கீழ் ரூ.22.57 இலட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடத்தினையும், பேரூர் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ.9.13 இலட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடை கட்டடத்தினையும் திறந்து வைத்து, அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி, சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை வழங்கி தொடங்கி வைத்தார்.

முன்னதாக, திருச்செந்தூர் பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில், திருச்செந்தூர் - புன்னக்காயல் - நாலுமாவடி - சாத்தான்குளம் புதிய வழித்தடத்தில் ஒரு நகர்ப்புற பேருந்து சேவையினையும், உடன்குடி பேருந்து நிலையத்தில் உடன்குடி சிறுநாடார்குடியிருப்பு - வேதக்கோட்டைவிளை - கொட்டங்காடு புதிய வழித்தடத்தில் ஒரு நகர்ப்புற பேருந்து சேவையினையும் மீன்வளம் மீனவர்நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா.ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மேற்கண்ட புதிய வழித்தடங்களில் தொடங்கி வைக்கப்பட்டுள்ள நகர்ப்புற பேருந்துகளில் பெண்கள் கட்டணமில்லா விடியல் பயணம் மேற்கொள்ளலாம் என்பது குறிப்படத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் ஊர்வசி செ.அமிர்தராஜ், மாவட்ட ஊராட்சித்தலைவர் அ.பிரம்மசக்தி, திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் சுகுமாறன், திருச்செந்தூர் நகர்மன்றத் தலைவர் சிவ ஆனந்தி, உடன்குடி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் பாலசிங், திருச் செந்தூர் நகர்மன்றத் துணைத் தலைவர் ஏ.பி.ரமேஷ், உடன்குடி பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் மால்ராஜேஸ், தூத்துக்குடி மண்டல பொது மேலாளர் (த.அ.போ.க) பால சுப்பிரமணியன், திருச்செந்தூர் நகராட்சி ஆணையாளர் கண்மணி, திருவைகுண்டம் வட்டார வளர்ச்சி அலுவலர் சுரேஷ், தூத்துக்குடி கோட்ட மேலாளர் ரமேசன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் முனியாண்டி (கோவங்காடு), செல்வக்குமார் (பழையகாயல்), ஈஸ்வரி (பேரூர்) உட்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

## இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் திடீரென மின்கசிவு ஏற்பட்டு கிளம்பிய புகையால் பரபரப்பு

இராமநாதபுரம், ஜன.3

இராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 01.01.2025 அன்று இரவு சுமார் 11.15 மணியளவில் புதிய கட்டிடத்தின் இரண்டாவது தளத்தில் நிர்வாக பிரிவு அருகில் உள்ள மின்சார தொழில்நுட்ப அறையில், திடீரென மின்கசிவு ஏற்பட்டு புகை எழுந்தது. அந்த தளத்தில் மின்கசிவு ஏற் பட்ட அறை அருகில் உள்நோயாளிகள் பிரிவு ஏதுமில்லை.

மேலும், மாவட்ட ஆட்சியர் அறிவுரைப்படி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, புதிய கட்டிடத்திற்கான மின்சாரம் நிறுத்தப்பட்டது. அதனால், அங்கிருந்த 300 உள்நோயாளிகள் 25 நிமிடத்திற்குள் மற்ற வார்டுகளுக்கு மாற்றப்பட்டனர். சிறிதளவு புகை வந்ததால், யாருக்கும் மூச்சுத்திணறலோ, அல்லது புகையினால் ஏற்படும் உபாதைகளோ ஏற்படவில்லை.

கட்டிடத்தின் எப்பகுதியிலும் தீ ஏற்படவில்லை இருப்பினும், தீயணைப்புத் துறைக்கும், காவல் துறைக்கும் தகவல் அளிக்கப்பட்டு, அவர்களும் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். புகை எழுந்த கட்டிட தளத்தில் தானியங்கி நீர் தெளித்தல் முறை நடை முறையில் இருந்ததாலும். கையில் வைத்திருக்கும் தீயணைப்புக் கருவிகளைப் பயன்படுத்த பயிற்சி பெற்ற நபர்களைக் கொண்டும் மின்கசிவினால் ஏற்பட்ட புகை சிறிது நேரத்துக்குள் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

சம்பவ இடத்திற்கு மாவட்ட ஆட்சியர் உடனடியாக வருகை தந்து பார்வையிட்டு பாதுகாப்பு நடவடிக்கைக்கான பணிகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முன்னிலையில் மாவட்ட தீயணைப்பு அதிகாரி, மாவட்ட வருவாய் கோட்ட அலுவலர் மற்றும் பொதுப் பணித்துறை பொறியாளர்கள் அனைவரும் மேற்கொண்டனர். இந்த அவசரநிலை எந்தவித உயிர்சேதமும் இழப்புகளும் இன்றி அவசர நிலையிலும், நல்ல முறையில் கையாளப்பட்டது. இத்தகைய ஜெனரேட்டர் உதவியுடன் தடையின்றி மருத்துவப் பணிகள் இயங்கி வந்தது.

இந்த மின் கசிவு புகையின் மூலம் ஏற்பட்ட விபத்தினால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற எவருக்கும் உயிர் சேதமோ, மூச்சுத்திணறலோ வேறு எந்த உபாதைகளோ ஏற்படவில்லை.

மேலும் இந்த விபத்து நடந்த இடத்திற்கும், அவசர சிகிச்சை பிரிவு மையத் திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

அவசர சிகிச்சை பிரிவில் தொடர்ந்து மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது. விபத்து ஏற்பட்ட இடம் உடனடியாக கட்டுக்குள் கொண்டு வரப்பட்டு தடையின்றி மருத்துவ சேவைகள் சிறப்பான முறையில் வழங்கப்பட்டு வருகிறது என அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு ராமநாதபுரத்தில் தேர்வாணைய பயிற்சி! ஆட்சியர் தகவல்

ராமநாதபுரம், ஜன.3

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், தெரிவித்ததாவது தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் (தாட்கோ) முன்னெடுப்பாக முன்னனி பயிற்சி நிறுவனம் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் Group II &IIA தேர்வு



களுக்கு பயிற்சியினை வழங்கவுள்ளது.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் TN-PSC Group-II &IIA முதல் நிலை தேர்வில் (Preliminary exam) தேர்ச்சி பெற்று முதன்மை தேர்விற்கு (Yöin) தேர்ச்சி பெற விரும்பும் மாணாக்கர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சியினை பெற பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றவர்களும் 21 முதல் 32 வயது நிரம்பிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சார்ந்தவர்களாக இருக்க வேண்டும், விடுதியில் தங்கி படிக்க வசதியும், பயிற்சிக்கான செலவீன தொகை தாட்கோவால் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தில் பதிவு செய்வதற்கு www.tahdco.com என்ற தாட்கோ இணையதளத்தில் பதிவு செய்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## வருண் ஐபிஎஸ், சீமான் வார்த்தை மோதல் விரும்பத்தக்கதல்ல! கார்த்தி ப.சிதம்பரம் பேட்டி

காரைக்குடி ஜன.3

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி பாராளுமன்ற அலுவலகத்தில் வருண் ஐபிஎஸ், சீமான் வார்த்தைகளால் மோதல் விவகாரத்தில் தமிழ்நாடு தலைமைச் செயலாளரும், தமிழ்நாடு காவல்துறை இயக்குனர் மற்றும் படைத்தலைவர் உடனடியாக தலையிட்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சிவகங்கை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் கார்த்தி சிதம்பரம் கேட்டுக்கொண்டார். ஆங்கில




புத்தாண்டு நாளில் சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் கார்த்தி. ப.சிதம்பரம். அவர்கள் காரைக்குடியில் உள்ள பாராளுமன்ற அலுவலகத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த போது அவர் இவ்வாறு கூறினார். அப்போது எஸ் மாங்குடி எம்எல்ஏ, சிவகங்கை மாவட்ட தலைவர் சஞ்சய் காந்தி நகர தலைவர் பாண்டியன், முன்னாள் எம்எல்ஏ சுப்பிராம், கே.டி.குமரேசன், நடிகர், சிதம்பரம் செட்டியார், ரயில்வே தட்சிணாமூர்த்தி, அப்பாவு ராமசாமி, மனச்சை கருப்பையா, கோவிலூர் அழகப்பன், ஆகியோர் உடன் இருந்தனர்.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்நலத்துறை அமைச்சர் நாசர், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தலைமையில் கன்னியாகுமரி விருந்தினர் மாளிகையில்வேர்களைத்தேடி பண்பாட்டு கலை பயணமாக கன்னியாகுமரிக்கு வருகை தந்த புலம்பெயர் தமிழர்களுடன் கலந்துரையாடினார்கள். உடன் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் உட்பட பலர் உள்ளார்கள்.




Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161